**திருகோணமலை பவர் கம்பனி லிமிட்டட் - 2020/2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

திருகோணமலை பவர் கம்பனி லிமிட்டட்டின் (“கம்பனி”) 2021 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2021 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான பொருண்மையான நிச்சயமற்றதன்மை

எனது அபிப்பிராயத்தை முனைப்பழியாக்காமல் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்வதற்கு கம்பனிக்குள்ள ஆற்றல் தொடர்பாக ஐயப்பாடு ஏற்படக்கூடுமெனும் நிச்சயமற்ற தன்மையை விளக்குகின்ற நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இல. 2.1.5 தொடர்பாக நான் கவனம் செலுத்துகின்றேன்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.5 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக

காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு

### 1.6.1 கணக்காய்விற்கான ஆவணச் சான்று சமர்ப்பிக்கப்படாமை

| கணக்காய்வு விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| காணி மற்றும் அபிவிருத்தி சொத்துக்களை பதிவழித்தல் | 2,985,550 | ஒப்பந்ததாரரிடமிருந்தான ஒப்புதல் மற்றும் பதிவழித்தல் தொடர்பான சபை தீர்மானம் | ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்ட ஒப்பந்த பெறுமதியை குறைத்ததால் இப் பதிவழிப்பு மேற்கொள்ளப்படுகிறது. இணங்கியதை விட குறைவான பெறுமதியை செலுத்தி சங்கிலி இணைப்பு | கணக்காய்வாளர் தலைமை அதிபதி கோரிய தகவல்கள் கணக்காய்விற்கு வழங்கப்பட வேண்டியதுடன் காணி மற்றும் அபிவிருத்தி சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் |

| | | |
|---|---|---|
| | வேலி ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்ததால் ஆரம்ப ஒப்பந்த பெறுமதியிலிருந்து கழிக்கப்பட்ட தொகையை மாற்றியுள்ளோம். | உள்ளடக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 12,875,278 ஆன வரிக்கு முன்னரான தேறிய நட்டமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறிய நட்டம் ரூபா 13,475,234 ஆக இருந்தது. அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 599,956 ஆல் நட்டத்தில் வீழ்ச்சியொன்று காட்டப்பட்டது. சம்பளம் மற்றும் அலுவலக வாடகை செலவினங்கள் குறைவடைந்தமை இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலையில் ஏற்பட்ட தாமதங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சம்பூரில் 50 ஆறு சூரிய மின்னுற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கு கம்பனி 2018 ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றிருந்த போதிலும் கூட்டு முயற்சி பங்குதாரர் உடன்படிக்கை அல்லது செயற்திட்ட உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுதல் போன்ற குறைந்தபட்ச ஆரம்ப நடவடிக்கைகள் தொடர்பான குறித்த மின் உற்பத்தி நிலையத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் 2022 சனவரி 31 வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கம்பனியால் 2022 சனவரி 31 லரை எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் மீளாய்வாண்டில் நிர்வாகச் செலவினங்களுக்காக ரூபா 12,977,874 தொகை செலவிடப்பட்டுள்ளது. | 50 ஆறு சூரியசக்தி மின் நிலையத்தை தொடங்குவதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்றுவருகின்றன. தற்போது இலங்கை மின்சார சபை (ஊநுடீ) மற்றும் தேசிய அனல் மின் கூட்டுத்தாபனம் (வேீஊ) ஆகிய இரு பங்குதாரர்களும் சம்பூரில் 50 ஆறு சூரியசக்தி மின் நிலையத்தை உருவாக்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளதுடன் கூட்டு முயற்சி பங்குதாரர் உடன்படிக்கையை (துஏளூர்யு) இறுதி செய்வதன் இறுதிக் கட்டத்தில் உள்ளனர். குறித்த ரூபா 12.9 மில்லியன் நிர்வாகச் செலவினங்கள் சங்கிலி இணைப்பு வேலி மீதான ரூபா 2.7 மில்லியன் பெறுமானத்தேய்வை உள்ளடக்குகின்றது. மேலும் நிர்வாக மேந்தலைகள் 2020 உடன் ஒப்பிடும் போது கிரயக் குறைப்பு காரணமாக ரூபா 5 மில்லியனால் (பெறுமானத்தேய்வு இல்லாமல்) குறைவடைந்திருந்து. | அமைச்சரவை தீர்மானத்தை அமுல்ப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுக்கான திட்டத்தை கம்பனி தயாரித்திருக்கவில்லை. | இதனால் அலுவலகத்தை பராமரிப்பதற்கும், வேஃஊ மற்றும் ஊநுடீ உடன் ஒருங்கிணைப்பதற்கும் மற்றும் அத்தியாவசிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பதவியணியினர் ஒரு உத்தியோகத்தராக குறைக்கப்பட்டனர். ஆகையால் கம்பனியின் தற்போதைய தன்மை காரணமாக வழங்கப்பட்ட அவதானிப்பு பொருந்தாது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுக்கான திட்டத்தை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | இதனால் அலுவலகத்தை பராமரிப்பதற்கும், வேஃஊ மற்றும் ஊநுடீ உடன் ஒருங்கிணைப்பதற்கும் மற்றும் அத்தியாவசிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பதவியணியினர் ஒரு உத்தியோகத்தராக குறைக்கப்பட்டனர். ஆகையால் கம்பனியின் தற்போதைய தன்மை காரணமாக வழங்கப்பட்ட அவதானிப்பு பொருந்தாது. | உரிய வழிகாட்டல்கள் மற்றும் சுற்றறிக்கைகளுடன் இணங்குதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திருகோணமலை பவர் கம்பனி லிமிட்டட், ஒருங்கிணைப்பு நோக்கங்களுக்காக ஊநுடீ இற்கு கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளை சமர்ப்பித்ததுடன் பொதுவாக ஊநுடீ வருடாந்த அறிக்கைகள் மற்றும் துணை கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளை அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கின்றது. | சுற்றறிக்கை மூலம் வேண்டப்பட்டவாறு பாராளுமன்றத்தில் ஆண்டறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4.2 கூட்டிணைந்த திட்டமும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமும்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கூட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை கம்பனி தயாரித்திருக்கவில்லை. | தற்போது இரண்டு பங்குதாரர்களும் (ஊநுடீ மற்றும் வேீஊ) சம்பூரில் 50 ஆறு சூரியசக்தி மின் நிலையத்தின் அபிவிருத்தியை விரைவுபடுத்தும் நோக்கில் பணியாற்றி வருகின்றனர். துஏளுர்யு இற்கு சட்டமா அதிபரின் அங்கீகாரம் கிடைத்தவுடன் ஏனைய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். எனவே, கம்பனியின் தற்போதைய தன்மை காரணமாக வழங்கப்பட்ட அவதானிப்பு பொருத்தமற்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட வேண்டும். |

## 4.3 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமனம் செய்திருக்கவில்லை அல்லது உள்ளக கணக்காய்வுப் பிரிவை ஸ்தாபித்திருக்கவில்லை. மேலும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 மற்றும் 41 ஆம் பிரிவுகள் மற்றும் 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திருகோணமலை பவர் கம்பனி லிமிட்டட் உள்ளக கணக்காய்வுகளை மேற்கொள்வதற்காக உள்ளக கணக்காய்வாளரின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை. ஆகையால் கம்பனி சூரியசக்தி மின்வலு செயற்திட்டத்தின் வணிக நடவடிக்கைகளைத் தொடங்கியவுடன் இது செயற்படுத்தப்படலாம். | உரிய வழிகாட்டல்கள் மற்றும் சுற்றறிக்கைகளுடன் இணங்குதல் வேண்டும். |

## 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிறுவனத்திற்கான நீண்ட கால இலக்குகளை அடைந்துகொள்வதற்கான கூடுதல் படியாக கம்பனி அடுத்த ஆண்டில் தனக்கு நிர்ணயித்த இலக்குகளை அடையும் வகையில் பாதீட்டை தயாரித்திருக்கவில்லை. | தற்போது இரண்டு பங்குதாரர்களும் (ஊநுடீ மற்றும் வேீஊ) சம்பூரில் 50 ஆறு சூரியசக்தி மின் நிலையத்தின் அபிவிருத்தியை விரைவுபடுத்தும் நோக்கில் பணியாற்றி வருகின்றதுடன் துஏளுர்யு ஐ இறுதி செய்வதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. துஏளுர்யு இற்கு சட்டமா அதிபரின் அங்கீகாரம் கிடைத்தவுடன் ஏனைய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். எனவே, கம்பனியின் தற்போதைய தன்மை காரணமாக வழங்கப்பட்ட அவதானிப்பு பொருத்தமற்றது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் கம்பனிக்கான வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |